DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 391 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW1 – PW1 | | | |
| Name | : | முத்துச்சாமி | Age | : | 70 |
| S/o | : | வேலு | Occupation | : | பெட்டிக்கடை |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 07th day of July 2026.

**07.07.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உச்சிப்புளி கிராமத்தில் குடியிருந்து பெட்டிக்கடை நடத்தி வருகிறேன். கடந்த 18.06.2024ம் தேதி இரவு 11.45 மணியளவில் நானும், எனது மனைவியும் உச்சிப்புளியில் உள்ள எங்களது கடையை அடைத்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது எனது ஊரில் 3வது தெருவில் அமைந்துள்ள மகேந்திரன் என்பவரின் வீட்டிற்கு பின்புறம் சென்று கொண்டிருந்தபோது எனது ஊரை சேர்ந்த மணி என்பவரின் மகன் பிரசாத் என்பவர் திடீரென்று எங்கள் முன்பு வந்து புண்ட, சுன்னி என்று சொல்லி கத்தியை காட்டி உன்னிடம் உள்ள பணத்தை எல்லாம் எடு என்று சொன்னார். அவர் என்னை பார்த்து பணத்தை கொடுக்கவில்லை என்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று சொன்னார். அதனால் நான் எனது சட்டைப்பையில் வைத்திருந்த 500 ரூபாய் பணத்தாளை எடுத்து எதிரியிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் 500 ரூபாய் பணத்தாள் என்னுடையது தான். அந்த பணம் தான் நான் எதிரியிடம் பயத்தில் கொடுத்த பணம். **2CT 997889 என்ற எண் கொண்ட 500 ரூபாய் பணத்தாள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கத்தி எதிரி பிரசாத் கையில் எடுத்து வந்து என்னை மிரட்டிய கத்தி. மரகைப்பிடியுடன் கூடிய கத்தி அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது தொடர்பாக போலிசில் புகார் அளித்தால் உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். அதனால் நாங்கள் பயந்து கொண்டு இருந்தோம். பின்னர் ஒரு நாள் கழித்து நானும், எனது மனைவியும் உச்சிப்புளி காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்ததுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தினால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.07.08 11:06:42 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 391 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW2 – PW2 | | | |
| Name | : | பாக்கியஜோதி | Age | : | 50 |
| W/o | : | முத்துச்சாமி | Occupation | : | பெட்டிக்கடை |
| Village | : | உச்சிப்புளி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 07th day of July 2026.

**07.07.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உச்சிப்புளி கிராமத்தில் குடியிருந்து பெட்டிக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது கணவர். கடந்த 18.06.2024 ம் தேதியன்று இரவு சுமார் 11.45 மணியளவில் 11.45 மணியளவில் நானும், எனது கணவரும் உச்சிப்புளியில் சேதுபதிநகரில் உள்ள எங்களது கடையை அடைத்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது எனது ஊரில் 3 வது தெருவில் அமைந்துள்ள மகேந்திரன் என்பவரின் வீட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது எனது ஊரை சேர்ந்த மணி என்பவரின் மகன் பிரசாத் என்பவர் திடீரென்று எங்கள் முன்பு வந்து கிழட்டு தாயோழி என்றும், பல கெட்ட வார்த்தைகளை சொல்லியும் கத்தியை காட்டி உங்களிடம் உள்ள பணத்தை எல்லாம் எடுங்கள் என்று சொன்னார். பணத்தை கொடுக்கவில்லை என்றால் உங்களை கொன்றுவிடுவேன் என்று சொன்னார். அதனால் எனது கணவர் சட்டைப்பையில் வைத்திருந்த 500 ரூபாய் பணத்தாளை எடுத்து எதிரியிடம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் 500 ரூபாய் பணத்தாள் எனது கணவருடையது. அந்த பணம் தான் எனது கணவர் எதிரியிடம் பயத்தில் கொடுத்த பணம். 2CT 997889 என்ற எண் கொண்ட 500 ரூபாய் பணத்தாள் அ.சா.பொ.1–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கத்தி எதிரி பிரசாத் கையில் எடுத்து வந்து எங்களை மிரட்டிய கத்தி. மரகைப்பிடியுடன் கூடிய கத்தி அ.சா.பொ.2–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மறுதினம் நானும், எனது கணவரும் உச்சிப்புளி காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தினால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.07.08 11:06:59 +0530